# Public Service Announcement

## காலக்கெடு நீட்டிக்கப்பட்டது

### *வாகன் சுவை விழா (Vaughan Flavours) நிகழ்ச்சிக்கான விண்ணப்பம் நவம்பர் 14 வரை திறந்துள்ளது*

**வாகன், ஒன்றாரியோ (அக். 31, 2025)** – வாகன் சுவை விழாவுக்கான ஆர்வம் அதிகரித்து வருகிறது! வாகன் சுவை விழாவுக்கான ஆர்வம் அதிகரித்து வருவதால், உள்ளூர் உணவகங்கள் தங்களின் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க **நவம்பர் 14, வெள்ளிக்கிழமை** வரை நேரம் வழங்கப்பட்டுள்ளது!

இரண்டு வாரங்களுக்கு நடைபெறும் இந்த உணவுவிழாவின் குளிர்காலப் பதிப்பில், மக்கள் வருகை தர விரும்பும் பிரபலமான இடங்களின் பட்டியலில் உங்கள் உணவகத்தைச் சேர்க்க இன்னும் நேரம் இருக்கிறது. இந்த விழா ஜனவரி 23, வெள்ளிக்கிழமை முதல் பிப்ரவரி 6, வெள்ளிக்கிழமை வரை, வாகன் நகரம் முழுவதும் பங்கேற்கும் உணவகங்களில் நடைபெறும். அங்கு விருந்தினர்கள் பல விலை வகைகளில் வழங்கப்படும் மூன்று-கோர்ஸ் ப்ரீக்ஸ் ஃபிக்ஸ் மெனுக்களை அனுபவிக்கலாம் (இதன் பொருள் – பல கோர்ஸ் கொண்ட உணவுகள் ஒரே, நிர்ணயிக்கப்பட்ட விலையில் வழங்கப்படுகின்றன)

குடும்ப-நட்பு உணவகங்களிலிருந்து உயர்தர உணவக அனுபவங்கள் வரை, மற்றும் அதற்கிடையேயும் – ஒவ்வொருவருக்கும் ருசிகரமானது ஒன்றாவது இருக்கும்.

வாகனில் உட்கார்ந்து உணவருந்தும் வாய்ப்புகள் கொண்ட உணவகத்தை நீங்கள் வைத்திருந்தால் அல்லது இயக்கினால், மேலும் தகவல்களுக்கு அணுகி, விதிமுறைகளைப் பரிசீலித்து, **வாகன் சுவை விழா குளிர்காலப் பதிப்பில் பங்கேற்க நவம்பர் 14 வெள்ளிக்கிழமைக்குள்** visitvaughan.ca/**VaughanFlavours**-ல் விண்ணப்பிக்க உங்களை நாங்கள் அழைக்கிறோம். வாகன் சுவை விழாவில் பங்கேற்பது இலவசம்; பங்கேற்கும் உணவகங்கள் $500 முழுமையாகத் திருப்பி வழங்கப்படும் வைப்புப் பணத்தை வழங்க வேண்டும். நிகழ்ச்சி வெற்றிகரமாக முடிந்தவுடன், இந்த வைப்புப் பணம் திருப்பி வழங்கப்படும்.

நிகழ்ச்சியைத் தங்கள் குளிர்காலப் பயணத் திட்டங்களில் சேர்ப்பதில் ஆர்வமாக உள்ள அனைத்து உணவுப் பிரியர்களுக்கும், பங்கேற்கும் உணவகங்களின் பட்டியல் இந்த இலையுதிர்காலத்திற்குப் பின்னர் அறிவிக்கப்படும். காத்திருக்கவும்!

வாகன் சுவை விழா என்பது, அமெரிக்காவில் விதிக்கப்பட்ட பரந்த அளவிலான வரிகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையாக, உள்ளூர் வணிகங்களை ஆதரிக்க உருவாக்கப்பட்ட நகரத்தின் முன்முயற்சி ஆகும். இது மேயர் ஸ்டீவன் டெல் டுகாவும், வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டாவும் முன்வைத்த உறுப்பினர் தீர்மானத்தின் அடிப்படையில் உருவானது. அந்தத் தீர்மானம், வாகனில் வசிப்பவர்களும் பார்வையாளர்களும் உள்ளூர் உணவகங்களில் உணவருந்த ஊக்குவிக்கும் ஒரு முயற்சி திட்டத்தை உருவாக்க நகர ஊழியர்களை வழிநடத்துகிறது. ஏப்ரலில், வாகன் கவுன்சில், வாகன் சுவை விழாவுக்கான முயற்சி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஊழியர் அறிக்கையை அங்கீகரித்தது.

வாகன் சுவை விழாவின் முதல் கோடைக்காலப் பதிப்பு மிகப்பெரிய வெற்றியை பெற்றது, இதில் 20 உணவகங்கள் பங்கேற்றன.

நகரத்தின் சுற்றுலா, வணிக ஆதாரங்கள் மற்றும் புதிய முயற்சிகள் பற்றிய சமீபத்திய தகவல்களைப் பெற, vaughanbusiness.ca/**enewsletters**

என்ற இணையதளத்தில் பொருளாதார மேம்பாட்டு துறையின் இ-செய்திமடலில் பதிவு செய்யவும். மேலும், அதிகாரப்பூர்வLinkedIn மற்றும் Instagram சேனல்களைப் பின்தொடரவும்.

நேரடியாகப் புதுப்பிப்புகள் மற்றும் செய்திகள் பெற, Vaughan News-ல் பதிவு செய்யவும், மேலும், X, Facebook, Instagram மற்றும் LinkedIn ஆகிய வாகன் நகரத்தின் அதிகாரப்பூர்வ சேனல்களைப் பின்தொடரவும்.

**இந்தப் பொதுச் சேவை அறிவிப்பை கீழ்க்காணும் மொழிகளில் வாசிக்கவும்**

- காண்டோனீஸ்
- பார்சி
- எபிரேயம்

- ஹிந்தி
- இத்தாலிய மொழி
- ஜப்பானிய மொழி
- மாண்டரின்
- ரஷ்ய மொழி
- ஸ்பானிய மொழி
- டேகலாக்
- தமிழ்
- உருது
- வியட்நாமிய மொழி

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca